**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**////////////**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** **Case No.C.C. 85 of 2024 PW :2**

**Sessions**

**Prosecution**

**Deposition of witness for** **Defence**

**Court**

**Name** **: திருமதி. வசந்தா**

**Husband's Name** **: திரு. வெங்கடேசன்**

**Village** **:**

**Taluk** **:**

**Calling** **:**

**Age** **: 38**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.06.2026.**

**தேதி. 05.06.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 85/2024, அ.த.சா.2. திருமதி. வசந்தா க/பெ. திரு. வெங்கடேசன் வயது 38 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

முதல் விசாரணை

1. நான் தற்போது கரிம்பேடு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் டிபன் கடை வைத்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். கடந்த 28.07.2024 அன்று காலை 11.00 மணியளவில் வீட்டின் பின்புறமாக நானும் எனது கணவர், மகள், மற்றும் மாமனார், மாமியாருடன் விறகு வெட்டிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு பெண் வந்து கேட் அருகில் நின்று தண்ணீர் கேட்டார்கள். எனது கணவர் வந்து எட்டிப்பார்த்தற்கு யார் மா நீ என்று கேட்டதற்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்டதால் அதை எடுத்து வர உள்ளே எனது கணவர் செல்லும்போது உடனே பின்னாடியே அவரும் பிரிட்ஜ் அருகே வந்து தண்ணீர் குடித்தார். பின்னர் அவர் நன்றி என்று கூறி சென்றுவிட்டார். பின்னர் எனது மகள் வரும்போது எங்கள் பிரிட்ஜ் மீது இருந்த எனது மகள் செயினை காணவில்லை. அது சுமார் ஒரு 1 ½ சவரன் இருக்கும். அதன் பிறகு நாங்கள் வீடு முழுவதும் தேடிப்பார்த்தோம். கிடைக்கவில்லை. எனவே காவல் நிலையம் சென்று புகார் தெரிவித்தோம். அதற்கு போலிசார் ஆடிக்கிருத்திகை என்பதால் போலிசார் திருத்தணியில் பந்தோபஸ்தில் இருப்பதால் கண்டுபிடித்து தருகிறோம் என்று கூறியதின் பேரில் புகார் அளித்துவிட்டு வந்துவிட்டோம். இது குறித்து போலிசார் வீட்டில் வந்து விசாரித்தார்கள். பின்னர் 09.08.2024 அன்று எனது கணவருக்கு போன் செய்து எங்களது நகையை எடுத்துச்சென்ற நபரை பிடித்து விட்டதாகவும் அவர் பெயர் ஜான்சிராணி என்றும் ஊர் சொரக்காய்பேட்டை என்று தெரிவித்ததின் பேரில் நாங்கள் காவல் நிலையம் சென்று இந்த வழக்கின் எதிரியை பார்த்தோம். மேலும் எங்கள் வீட்டில் இருந்து காணாமல் போன செயினை நானும் எனது கணவரும் அடையாளம் காண்பித்தோம். நீதிமன்றத்தில் பெற்றுகொள்ளுமாறு கூறியதின் பேரில் நீதிமன்றதில் மனு செய்து நகையை பெற்றுகொண்டோம். சம்பவத்தன்று இந்த வழக்கின் எதிரியை நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் எனது கணவர்

என்னிடம் தெரிவித்ததின் பேரில் எதிரியை நான் பார்த்தேன். தற்போது நீதிமன்றத்திற்கு வந்திருந்தால் எதிரியை நான் அடையாளம் காண்பிப்பேன். இது குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

சம்பவம் நடந்த அன்றே நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். அதன்பிறகு 3 நாட்கள் கழித்து போலிசார் எங்களை வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். நகையை வீட்டில் எங்கு வைத்திருந்தோம் என்று தெரியாமல் மாலை வரை தேடிப்பார்த்து பிறகு எதிரி தான் நகையை எடுத்திருப்பார் சந்தேகத்தின் பேரில் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம் என்றால் சரிதான். நகையின் மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். அது குறித்து புகாரில் தெரிவித்துள்ளோமா என்றால் தெரிவித்துள்ளோம். நகைக்கான பில் எதுவும் கொடுக்கவில்லை. அது 5 அல்லது 6 வருடத்திற்கு முன்பு எடுத்த பழைய நகை ஆகும். எதிரி தான் நகையை திருடினார் என்று காவல் நிலையத்தில் தகவல் கூறிதான் எனக்கும் எனது கணவருக்கும் தெரியும் என்றால் சரிதான். நான் கூறுவது போல் வழக்கு சம்பவமே நடைபெறவில்லை என்றும் எனது கணவர் அளித்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

நாங்கள் நகையை காணவில்லை என்று இந்த பக்கம் யாராவது போனார்களா என்று சோதிப்பதற்காக குமாரமங்கலம் சந்திரன் என்பவரது வீட்டில் உள்ள கண்காணிப்பு கேமராவை பார்த்தபோது இவ்வழக்கின் எதிரியை நான் பார்த்தேன். கண்காணிப்பு கேமரா பதிவை தற்போது எனது கணவர் அவர் வீட்டில் இருந்து பதிவேற்றம் செய்து வைத்துள்ளார்.

**மறுவிசாரணையின் பேரில் குறுக்கு விசாரணை**

எங்களது வீட்டில் வைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவின் அடிப்படையில் பார்த்து நான் அவ்வாறு கூறுகிறேனா என்றால் அவ்வாறு இல்லை 2 கி.மீ தூரம் தள்ளியுள்ள சந்திரன் என்பவரது வீட்டில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவை பார்த்து கூறினேன். கண்காணிப்பு கேமரா பதிவினை எனது கணவர் தான் பார்த்துள்ளார். எனவே அவருக்கு தான் அதன் விவரம் தெரியும் என்றால் சரிதான்.

**ஒப்பம் – K. வெங்கடேசன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு(FAC)**